மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரள அரசுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆறுகளின் மீது மீண்டும் பேசுவதற்குத் தயாராக இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனால்தான் நான் முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொன்னேன். 32 டி.எம்.சி. கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் 23 டி.எம்.சி. தான் இப்போது கிடைக்கும் நிலை இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. து. ராமசாமி : பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து இன்றுவரை அதை விஸ்தரிப்பதற்கு பல நிலைகளில் முடிவு எடுக்கப்பட்டு இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பல கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தை தாராபுரம் தாலுகாவிற்கு விஸ்தரித்துக் கொடுத்து, எவ்வளவு ஏக்கர்கள் தாராபுரம் விஸ்தரிப்பில் எடுத்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட இருக்கிறது. தாராபுரத்தில் 38,150 ஏக்கர் பலன்பெறும்.

மின்வாரிய தலைமைப் பொறியாளர்கள்.

* 346 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின்சார வாரியத்தில் உள்ள தலைமை என்ஜினியர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ?

(ஆ) தலைமை என்ஜினியர்களின் தலைமை அலுவலகம் எங்கே உள்ளது ?

(இ) தலைமை அலுவலகங்கள் ஒரே இடத்தில் இருப்பதை மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆறு.

(ஆ) ஒன்று கோவையில் உள்ளது மற்றவை சென்னையில் உள்ளன.

1978, மார்ச் 2]

(இ) தேவையை ஒட்டி அவ்வப்போது மாற்றம் செய்யப் படுகிறது.

திரு. மு. அரங்கநாதன்: இந்த * * * *

அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியையொட்டிக் கேளுங்கள். அந்த விவரம் அங்கே இருக்க முடியுமா என்று யோசித்துக் கேட்க வேண்டும். எண்ணிக்கை கேட்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவழித்தார்கள் என்றில்லை.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: கேள்வி நேரத்தில் சார்ஜஸ் கூடாது என்பது நமது விதிமுறையில் இருக்கிறது. அதனால் உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா சரியாக இராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வியையொட்டி கேள்வி கேட்க வேண்டும். திரு அரங்கநாதன் கேட்ட கேள்வியில் அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு மு. அரங்கநாதன்: மின் பொறியாளர்களைப் பற்றிய கேள்வி இது, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அமருங்கள். கேள்வியையொட்டி துணைக் கேள்வி கேட்க வேண்டும். எழுந்து பேசிவிடுவது சுலபம். மீண்டும் அதையே பேசினால் என்ன பொருள்?

குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவு.

*347 வினா—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவை தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.